உ

சற் குருப்யோ நம;

விருத்தாசலம்

ஸ்ரீ குமார தேவ சுவாமிகள்

அருளிச் செய்த

மஹா ராஜத் துறவு.

இது

திருப் பூவண மடாதிபதி

ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய

சுவாமிகளால்

பதிப்பிக்கப் பெற்றது.

சிறப்புப் பாயிரம்.

திங்களொண் கவிகைத் திகிரியந் திணி தோட் டிகழ்கடற் ருனைமா ராஜ, னங்கண்மா நிலத்திற் றுறந்துவீ டடைந்த வரியவிக் காதை யைத் தமிழா, லிங்குமா தவத்தோ ரிசையுமென் றிசைப்ப விசைத்தனன் வீடுறக் கேட்டோர், கொங்கவிழ் பொழில்சூழ் பழமலை யுறையுங் குமா ரதே வென்னுமா முனியே.

சிவன்றிரு வுருவா மைந்து சின்மய வெழுத் தும் வாழி, நவந்தரு நீறும் வாழி நயநகன் மணி யும் வாழி, கவின்றருங் குமார தேவன் கழலிணை யிரண்டும் வாழி, யவன்றிரு வடியார் தம்மோ டாருயி ரனைத்தும் வாழி.

சற் குருப்யோ நம :

மஹா ராஜத் துறவு.

பாயிரம்.

அமரர்கள் பரவுந் திருமுது குன்றி லாழத் துப் பிள்ளையைச் சிகரிக், குமரசற் குருவை யிம கிரி ராஜ குமாரியாம் பெரியநா யகியை, மும்மலமு மொருங்கே யகற்றிடு முக்கண் முதல்வனைச் சாந் தநா யகனை, நமதெனப் படியே முடிந்திடத் திநமு நாடிநின் றிறைஞ்சிவாழ்த் திடுவாம். 1

தொய்யின் முலைக்கோ டிரண்டுகவான் றுதிக்கை மூன்று விழிதுரிசிற், றுய்ய சைவ முதன்மதமுந் துலங்க வருமொண் பிடியுலக, முய்ய வுதவு மொருகளிற்றை யுலவா விருத்த சைலத்தில், வையம் பரவு மாழத்து வாழைங் கரனை மநநினைவாம். 2

இருட்கலி வலியின் ஞானநன் னெறிக ளிறந் துயிர் கொடுநெறி மேவி, மருட்கொடு கலங்கா வகைகலி யென்றும் வந்தணு காப்பதி தன்னிற், றெருட்சத்தி கருணை யுருவதாய் நின்று தெளி விக்கு மிறைவியெங் குருவோர், அருட்கடல் பெரிய நாயகி யுலகுக் கனைமுதல் வியைப்பணிந் திடு வாம். 3

திங்களார் சடையிற் கங்கைநீர் துளிப்பத் திருந்திழை யுமையுளங் களிப்பப், பொங்கரா வொ டுநற் புலிமுநி வர்கண்மால் போதய னமரர்கள் போற்றத், துங்கநான் மறைக டுதித்திட வைந்து தொழில்விரிந் திடப்பொது வதனிற், செங்கழ லதிர நடஞ்செயும் பொருளைத் திகம்பணிந் திட ரொழித் திடுவாம். 4

அருளுருவா யுயிர்கடமக் கன்னை யாகி யஞ் ஞானந் தனையகற்றி யமல மாகி, மருளிலதாய் மெய்ஞ்ஞான மாகு முத்தி வாய்த்திடவே காத்த ருளி வானோ ரேத்த, இருள்கெடவே மிளிருமிருங்

கழல்க ளார்ப்ப விறைபுரியுந் திருநடத்தாற் களித்
து வாழுந், தெருண்மருவு மறைநான்கும் பரவுந்
தில்லைச் சிவகாம சுந்தரியைச் சிந்தை செய்வாம்.

செக்கர் போன்ஞெளிர் முக்கட்சி லம்பினை
மிக்க பேரருள் வேலையை யோர்கொம்பாற்
றக்க வன்பர்க்கு தவுந்த ருவினை
இக்க தைநிறை வேறவி றைஞ்சுவாம். 6

கடிகமழ் கரிய கூந்தற் கனிமொழித் துவர்
வாய்த் தெய்வப், பிடிதநக் கோட்டால் வள்ளிப்
பெண்கொடி படருஞ்செய்ய, படிபுகழ் புயமாங்
குன்றிற் பாயவண் கழுநீர் நீப, மடலவிழ் செழுந்
தார்ச் செவ்வேண் மலரடி வணக்கஞ் செய்வாம்.

வண்டுழா யலங்கன் மாயவன் மலர்மேல்
வதிந்தநான் முகன்மறை யறியாத், தொண்டை
வாய்க் கெண்டை விழிக்கழை மொழியொண் டுடி
யிடை யுமையையோ ரிடத்திற், கொண்டகோ
னருளைப் பொருளெனக் கருதிக் குலவிய சாதநந்

தரித்து, மண்டிய வடியார் யாவர்மற் றவர்தாண்
மநத்தினுஞ் சிரத்தினும் வைப்பாம். 8

சகரர்தம் வலியையுந் தடந்தி ரைக்கட
லகலமும் பின்புளோ ரகழி லஞ்சிதான்
புகழுற விளக்கலே போல விச்செயு
டைகதரு கலைஞர்நூ றனைவி ளக்குமால். 9

பாயிரம் முற்றிற்று.

நூல்.

தருக்கிளர் நைமி சாரணி யத்திற் றங்கிய முனிவர்கள் சூதன், வரப்பணிந் தேத்திக் கதைகள்பற் பலவா வகுத்துரைத் தனைமஹா ராஜன், றிருக்கதை யெங்கட் குரைத்திலை யதுநீ செப்பெனச் சுருதியிற் சொல்லுஞ், சுருக்கமில் காதை யிதுவெனத் தொகுத்துத் தோமறக் கேண்மி னென் றுரைக்கும். 1

குழைத்ததண் சினைத்தே மாவினொண் கனித்தேன் குலவிய பலவினற் பலத்தேன். றழைத்திடு கதலிப் பழமுகுத் திடுதேன் மூன்றிரண்டிலஞ்சியிற் றதும்பி, விழுத்தகு வயலிற் பாய்தர விளையு மிகுகரு ணுடைதே சந்தா, னிழைத்தாற் றவத்தா லுயிரெலாம் புரந்தங் கிருந்தர சாளுமோர் குரிசில். 2

மஞ்சம ரிஞ்சிசூழ் மாபு ரத்திருந்
தெஞ்சலி லெண்டிசை யிறைவர் தாடொழத்
தஞ்சமென் றடைந்தவர் தம்மைக் காத்திகல்
வஞ்சகர்க் காய்மஹா ராஜ மன்னனே. 3

தருநிழ லரசு வைகுஞ் சதமகன் றிருவின் மிக்கா, னுருவினின் மதனின் மிக்கா னுலத்தினிற் பலத்த தோளான், செருவினி லரியே றன்ன னேறெனு ஞிமிறும் பாட, முருகுடைந் தொழுகுந் தாரான் மூவுல களிக்கும் வேலான். 4

அரசர்வந் திடுதிறை யளக்கு முன்றிலான்
முரசுக ளதிர முழங்கு மன்றலான்

கரைபொரு திரையெறி கடலந் தானையான்
அருவரை மார்பினன் யாளி மொய்ம்பினன். 5

அரசர்தம் முடியுழு தவிருந் தாளினன்
எரிதவழ் திகிரியை யேந்துந் தோளினன்
மருவலர் வலியினை மாற்றும் வாளினன்
றருநிதிக் கொடையினன் றருக்கு நாளினே. 6

கவரியோ டால வட்டங் காரிகை யார்கள்
வீசப், பவளவா யரம்பை யன்னார் பாகடை யுதவ
முத்தத், தவளவா ணகையார் கீதந் தனிநடஞ்
செய்ய நின்று, குவலய மன்னர் போற்றக்
குரைகடற் றானை சூழ. 7

இந்திர ஞல யம்போ லிலங்கிய மண்ட பத்
திற், சுந்தர மிருக ராஜன் சுமந்தபூ வணையின்
மீது, வந்திருந் தவனி தன்னை மநுநெறி முறை
யிற் காத்தே, யந்தமில் போகந் துய்த்தங் கிருந்
திடு மரசர் கோமான். 8

தாம்புடைப் பிறையெ யிற்றுத் துத்தியீ ராயி
ரந்தோட், பாம்பினுற் பரிக்க லுற்ற பாரினைப்

பரிக்கப் பின்னர், மேம்படு புதல்வர் தந்தம் வீறு
டை வயிற்றி லென்று, தேம்படு தெரியன் மார்
பன் சிந்தையா குலங்க ளூற்றான். 9

கங்கையே முதலா மிக்க கடவுண்மா நதியிற்
றோய்ந்தும், பங்கையா சநன்மா றிங்கட் பவளவார்
சடையான் றன்னை, அங்கையாற் பூசை செய்து
மதிதிகட் களித்துந் தீயில், பொங்குமா குதிக
ளீந்தும் பூவலம் வந்துந் தேவர். 10

ஆலயஞ் சாலை யக்கி ராரநந் தநவ நங்கள்
கோலமா ரிலஞ்சி கூபங் குளம்பல செய்து மீரெட்
டேலுமா தாநத் தோடே யிரணிய முதலீ ரைந்து
சாலநற் றாந மீந்துந் தருமமெண் ணன்குசெய்தும்.

தவம்பல புரிந்து வேந்தன் றனையனைப் பூத்த
பின்னர்ப், பவந்தனைத் துடைத்தேன் மேலாம்
பரமநற் பதமு முண்டென், றுவந்துசா தககன்
மத்தோ டொழிவறு கரும மெல்லாம், நவர்தாச்
செய்து நாம நன்மஹா ராஜ னென்றே. 12

வேத நீதியிற் கூறிவி யன்றர
ஓத வெண்ணெண்க லையுமு ணர்த்துவித்
தேத மற்றகு ரவற்கி ரணியம் [போல்.
போது மென்னப்பொ ழிந்தனன் கொண்டல்

கொடிநெ ருங்குங்கொ டிஞ்சியந் தேர்பரி
கடம லிந்தக யமொண்சி விகையிப்
படியி லூரப்ப யிற்றுவித் தாசிலா
வடிவி லங்கும கற்கும ணஞ்செய்வான். 14

மடங்க லன்னப லமுள்ள மாமன்னன்
இடங்கொ ளெண்ணழு தேசத்தி றைவர்க்கு
முடங்கல் போக்கினன் கண்டுமு டிமன்னர்
தடங்கொள் சேனைகள் சூழ்வரச் சார்ந்தனர். 15

வடிகொள்வெண் சுதையாற் பித்திகை தீற்றி வானுற மணிக்கொடி நிரைத்துக், கடிநறுஞ் சாந்தங் குங்குமந் தன்னுற் கமழ்தர மறுகெலா மெழுகிப், பொடிகொள்சிந் தூரத்தாற் கோலமே புனைந்து பூமலர் பொரிநனி சிதறிக், கொடிகொண்மூ

தெயின்மேன் மாடமொண் சிகரி கோதறப் புதுக்
கியே குலவ. 16

கதலியுங் கமுகு நட்டுக் காவண மலங்க ரித்
துப், புதியதோ ரணங்கள் கட்டிப் பொற்குடஞ்
செறித்துத் தீபம், இதமுற வெங்கும் வைத்தே
யிந்திர னகரம் போல, மதுமலர்த் தாம நாற்றி
மாபுரி யலங்க ரித்தார். 17

வில்வி லங்குகை வேந்தர்ம ரபினில்
நல்ல சாமுத்தி ரிகநூ னன்கதாச்
சொல்வி லக்கணத் தோடுது ரிசிலா
முல்லை மாலைமு ருகுவி ரியவே. 18

மூவுல கதனி லுள்ள முகிழ்முலைக் கருங்கட்
செவ்வாய்ப், பாவைய ரெழிலிற் போதன் பகுத்
தெடுத் துயிரோ டேய, ஓவியந் தீட்டி ஞனென்
றுலகினி லுரைக்கச் செய்ய, பூவுறை திருவி ரும்
பும் பொற்புட னவத ரித்தே. 19

இலங்கிய வாலொண் டளிர்குழைத் தினிய
விருதநக் கோங்கிணைய ரும்பி, நலங்கிள ராம்பல்

குமிழிரு குவளை நண்ணுசெஞ் சரோருகம் பூத்துத், துலங்கிய புயலைச் சுமந்திரு தாளாற் றோமிலா மின்னென நடங்கிப், பலந்தரப் படருங் கொடியினை வேசைப் பண்பினின் மன்றல்செய் வித்தே. 20

அருந்ததி கணவன் முதன்முனி வரர்க ளருமறைக் கிழவர்க டம்மால், பொருந்திய கங்கைப் பூம்புன லாட்டிப் பொன்னவ மணிகளாற் குயின்ற, விரிந்திடு மடங்கன் மென்றவி சேற்றி மிளிர்நவ மணிமுடி கவித்துப், பருந்தடர் வேலான் பௌவமார் புவியைப் பரியெனத் தோன்றல்பா லளித்தான். 21

சோகமே யின்றி யிருந்தனன் வேந்தன் றோன்றலும் பார்பொது நீக்கி, ஏகமாய்ச் செங்கோ, லெங்கணுஞ் செல்ல வெண்டிசை விசயமுஞ் செய்தே, மாகநா டென்னப் போகமே துய்த்து மடந்தையோ டிருந்தன னென்றான், வாகைவே லவன்பி னென்செய்தா னென்ன மறைவர்க் குயர்முனி வகுக்கும். 22

மனைவியுந் தானு மோர்நினை வாகி மாறுபா டின்றியோர் காலுந், தனையுணர் யோகி தந்தை தாய் கடவு டங்களை யநுதின மிறைஞ்சி, அனையவ ருரைத்த நெறிதனி னடந்து மருத்தங்கண் மநதி னிற் றரித்தும், வினயம துடனே நான்முறை யவரை வினவியுஞ் சிலபகல் போக்கி. 23

தனியிட மதனி லிருந்திரு வர்களுந் தங்க ளிற் றுமுணர்ந் துசாவித், துணிசெய்மா மாயைப் பிறப்பது நீங்கிச் சுகமதை யடைந்தநு திநமும், இனிமைய தாக விருக்கலா ஞாநத் தென்றெணி ஞாநிகட் சார்ந்து, நனியவர் பாத பூசனை புரிந்து நாடொறும் வினவினர் நன்றாய். 24

இருவரி லரசன் றனக்கறி வோங்க விருவ கைச் சார்வையு மகற்றிக், கருவுடற் காவ றனையுங் கை விடுத்துக் கருத்தசை யாதுமெய் யுணர்வை, மருவிடி லகப்பற் றற்றுமேல் வீடு வாய்த்திடு மதற் குமெய்ஞ் ஞாநக், குருவரு ளின்றி விளங்கிடா தெனவே கொண்டனன் மநத்தினிற் றுணிவே.

மனைதனி லாசை பொருந்தியே நின்று மகி
மையின் ஞாநியா மெனவே, தனைமிக மதிப்போன்
றன்னைவந் தொருவன் றந்திடு ஞாநமென் றிரந்து,
வினவன்மட் டையினைப் பருகுவோன் றன்னை
வேண்டித்தென் னம்பழந் தனையே, யினம்பணித்
திரிவோன் புத்திபோன் மெனவே யியம்புவர்
முற்றுணர் பெரியோர். 26

வேதவா கமசாத் திரபுரா ணங்கள் விளங்க
வே கற்றுணர்ந் தவற்றைத், தீதற வெவர்க்குந்
தெளிவுற வோதிச் செப்பிய வந்நெறி யதனிற்,
சாதக மிலாத குருவினை யொருவன் றனடைந்
தாநந்தம் வினவல், ஏதமாங் கழுதை தன்னைக்குங்
குமத்தி னியல்புகேட் டிடுதல்போன் மென்றே.

சீவர்க ளிடத்தி லருள்சிவ பத்தி திருந்திய
துறவுமெய்ஞ் ஞாநம், ஆவதோர் வடிவாம் வேதமா
முநியை யமலவா ரணியத்தி லடைந்தே, தேவர்க
டேவே துன்பமோர் காலுஞ் சென்றிடா முத்தி
தா னெய்திச், சாவதும் பிறப்பு நீங்குமோர் நெறி
யைச் சாற்றெனத் தாழ்ந்திட முநிவன். 28

இருவகைச் சார்வாம் புறப்பற்றை நீக்கி யிச்சையின் மீட்டதி னினைவு, மொருவியே யுடற்காவலையுங்கை விடுத்தே யுட்கா ணங்கள்வா தனையுங், குருவரு ணெறியே. யொடுக்கிடில் வீடுங் கூடுந்தா னுகவே பவத்தின், கருவழிந் திடும்நெறியைநீ வினாவிற் கைக்கொண்டு செல்லெனவுரைத்தான். 29

அந்நெறி குருவா லையமுந் திரிவு மகன்றிடத் துணிவதாகக் கேட்டு, முன்னெறி யான வரசியற் கையினின் முயன்றனன் சிறிதுநா ளொருநாட், பின்னெறி யதனை நினைந்தனை வரையும் பெயர்ந்திட விடைகொடுத் தாசன், மன்னெறிக் கோல மகன்றந்தப் புரத்தில் வதிந்தன னொருவனாய்த் தனித்தே. 30

அரசர்க ளமைச்சர் புரோகிதர் பெரியோரனைவரு மவ்விடத் தேகி, அரசனை நோக்கி நித்திய கரும மகன்றுவா ளாவிருந் திடுதல், அரசிலக் கணமன் றெனவவர் வேண்ட வவர்களை நோக்கி

யே வேந்தன், அரசியற் கையினை வேண்டல
னென்னை யறியவே வேண்டின னன்றே. 31

ஆண்டதோ ரரசு தனிலும்போ கத்து மாசை
யற் றேனினி வெண்டேன், மாண்டதோர் வநத்தி
லொருவனுய்த் தனித்தே மநத்தசை வறுத்துவீ
டடைவேன், பூண்டவென் மநமிங் கினித்திரும்
பாது போகத்தைப் பொருளென வெண்ணி,
வேண்டல னீங்க ளரசனு வேறே விதித்துக்கொ
ளுங்களென் றுரைத்தான். 32

ஆதியி னினது தாதையு நினையே யரசினி
னிளமையிற் சூட்டத், தீதின்றி யுனது புயவலி
மையினிற் செகமதைத் தாங்கினை யினிமேல்,
நீதியி னுநிய மதியினு தாவி னின்னைப்போ
லொருவர்மற் றுளரோ, ஈதியற் கைதன் றிவ்வுட
லுடனே யிச்செல்வ மன்றிவே றுளதோ. 33

அலதுநீ யேகி னவனியுங் காப்பற் றவத்தி
லே யலைந்திடும் யாமுஞ், சலநம துறுவே மித்தகை
யெமைநீ தவிக்கவிட் டேகுதல் கடனன், றிலகிட

வெமக்கீ தருளென வமைச்ச ரியம்பிட வரசனும்
பார்த்தே, உலகமெய் யெனவெண் ணுறுமதி
யுடையோர்க் குரைப்பினு முணர்வுதி யாதால். 34

இவ்வர சியற்கை யற்பமற் றிதனு லெய்திடுந்
துன்பினுக் களவின், றவ்வகை யதனை யூகமின்
மையினு லறிகிலிர் நீங்களின் பென்றே, எவ்வகை
நினைந்தீ ரினியெக்கா லுங்கட் கீதின்ப மலதெனத்
தோன்றும், ஒவ்வமற் றிதனுக் கூகமே தோன்று
துங்களுக்குக் குலகயூ குதிக்கும். 35

என்றுமற் றநேக மாவிரித் தரச னெடுத்
தமைச் சர்கடமக் கியம்பி, நின்றுபின் னவரை
நிலுமென நிறுத்தி நிதிதுனும் பொன்மனை விடுத்
தே, சென்றுபின் னகர வீதியி னடக்கத் திரண்
டனை வர்களும்பின் ருெடர்ந்து, வன்றுய ரடை
ந்து வாடியே மெலிந்து வாரியி ஞேசையி னழு
தார். 36

அவரவர் வினையி னவரவர் வருவா ரவரவர்
வினையள வுக்கே. அவரவர் போக மென்றதே

யாயி னுருக்கார் துணையதா குவர்கள், அவரவர் தேக முளமொழு துடனே யாதர வாரென நாடி, அவரவ ரடைத னெறிகன்மத் தடையு மாதர வாதர வாமோ. 37

வினையுள் வள்வுங் கூடியே நிற்கும் வினை யகன் றிடிற்பிரிந் திடுமால், வினையினுல் வருமா தரவினி னியற்கை மெய்யுணர் வத்தகை யலவே, வினையிலை யுங்க ளிடத்தினு னிருக்க மெய்யுணர் வொன்றையே நாடி, வினையறு காநம் புகுதவே வேண்டி விரும்பினே னீர்நி லுமிங்ஙன். 38

என்றுநல் வேந்த னேதிலார் போல வேகின னனைவருங் கண்ணீர், நின்றெதிர் சொரிய வாய் விட்டே யலறி நின்றனர் தமர்கள்பின் னேகி, இன்றெமை யாவர் காத்தளித் திடுவ ரினியைநீ யேகுத னீதி, அன்றென வுரைத்தா ரவர்களை நோக்கி யரசனீ துரைத்தன னன்றே. 39

உறவாகு மெனவெனைநீர் தொடர்பதியல் பன்றுருகு முயிர்கட் கெல்லாம், உறவாகு ஞானநனி

பகையாகு மஞ்ஞான முய்த்து நோக்கின்,உறவான
வகையடைந்து பகையான விதைநீங்கி யொருமை
யாக, உறவாத றனக்குத்தா னேயெனமற் றுறவு
விடுத் தூறையு மென்றான். 40

தந்தைதா யிருவருந்தம் புதல்வனெனும்
வாஞ்சையினாற் றும்பின் னேகி, மைந்தவா வெங்க
ளிரு வரையுமெவர் காப்பதற்கு வைத்தாய் நீதான்,
சிந்தைதா னுனக்கெங்கே மகனேயுன் றிருமுகத்
தைத் திரும்பிக் காட்டாய், நொந்துதான் பெற்ற
வயி றெரிகின்ற தெனவுரைக்க நோக்கி மன்னன்.

அறிவைநோக் கிடிலதற்குத் தாய்தந்தை
யிலையிவ்வுட லதனை நோக்கி, விறையுநீ ருபா
தான காரணமன் றிருமாயை யினிலுண் டாகும்,
குறியிதுவிங் காயின்மண்ணி லெனைப்பெறு தவ
றிலையக் கொள்கை நீரு, நிறையுமதி யிலரேநீர்
நில்லுமென விருவரையு நீத்துப் போனான். 42

அரிவையர்க டமக்கிலக் கணங்கூறு நூல
தனி லதனை யெல்லாம், உரிமையதா வுடையவ

ளா மினியமனை தொடர்ந்தேகி யுருகி நின்று, பரிவினுட னடிகள்பணிந் தாற்றியே பதைபதைத் துப் பணிகண் பாயத், தரியெனுமை விடுத்துலக மதனிலொரு கணமேனுஞ் சாவே னென்றாள்.43

நின்னுடைய நாயகனை நினத்துள்ளே யுற நோக்கி நிற்கமாட்டா, துன்னுடைய நாயகனென் றென்றனையே கருதிநீ யுழல்வ தென்னே, மின்ன னைய விடையாய்கே ளனைவருக்கு நாயகனோர் மேலா மீச, னன்னவனை யேதேடிப் போகின் றே னெனவரசற் கரிவை சாற்றும். 44

ஞானமா னதுபொதுவே நூலதனிற் றுறவ தற்கு நவில்வ தில்லா, ளானமா தினையலவோ விடுகவென வறையும்பதி யானவுன்னை, யீநமா விடுகவென வறையுமதோ துறவறமிங் கெனக் கென் சொல்லு, மானதா லுமையொழிந்து கதி யிலையே யெனவெணியா னடுத்தே னென்றாள்.

ஆகமத்தின் விதிதவறா தறைந்தனைநீ விவே கியே யாவா யானுந், தேகமுதற் பிரபஞ்ச மதனி

னசை விடுத்துவனஞ் செல்லா நின்றேன், நாக மூலை யாயெனாரை தடுத்தலுன்றன் விரதமல நாடு தன்னிற், போகுதியென் றவளைவிடுத் தேதி லரைப் போலகன்று போகா நின்றான். 40

விரிவாய ஞானமதை யுணர்ந்தாலு மடந்தை
பதி விலங்க நிற்ற, லரிதாய தகைமையினா லேங்
கியே பதைபதைத்து மவனை நோக்கித், தரியாது
கதறியே வினைதனையே நொந்துதான் றளர்ந்து
நின்று, தெரியாது மறைந்தவிடந் தனின்மிகவு
முருகியே தேம்பி வீழ்ந்து. 47

வேந்தனே யுனைவிடுத்து முலகமதி லிருக்க
வோ விதித்தா னீசன், றீர்ந்ததோ வுமக்கெனக்
கும் வினைதானு மின்றளவிற் சேர்ந்து நிற்கும்,
போந்தவுமை யெக்காலங் காண்பேனா னினியென
வே புலம்பி மாதுஞ், சார்ந்தனள்பின் றிரும்பியே
நகரதனின் மாதுலன்றன் சார்பு தன்னில். 48

அரசனந்த நகர்விடுத்துத் தேசநா டகலு
மகன் றடவி சென்றே, யிரவுபக லகநிலையே நிலை

யாக விருந்தவர்க ளிடமே சேர்ந்து, பரகுருவி னுபதேசத் தரியபொருள் வினவியவர் பகரக் கேட்டுத், திரமாகமா யொருவராற் கலங்காத ஞானி யாய்த் தீர னாகி. 49

நகர்தனி லேகிப் பிச்சை நண்ணியே மனைக டோறு, மகமகிழ்ந் தங்கை யேற்றே யவ்விடத் தருந்தி யாங்கே, செகமுளோர் பேயென் றெண் ணிச் சிரித்திட நாண மின்றி, யிகபரத் திச்சை யற்றே யேகனு யுலாவ லுற்றான். 50

பொருந்திவா ழிடமொன் றாகிற் பொருந் திடும் பற்றென் றெண்ணி, யிருந்தில னோரி டத்து மெங்கெங்கு மொருவ னாகித், திருந்திய சமாதி விட்டுத் திரும்பிடா துறைக்க வுண்ணி, யிருந்திருந் திடங்க ளெங்கு மேகமே நோக்கி நின்றான். 51

தோன்றிடு முலக மெங்கே தோன்றிடு மென்ன நோக்கித், தோன்றிடு நினைவி லென்றே தோன்றிய நினைவு தானுந், தோன்றிடு மிடத்

ஷதப் பார்த்துத் தோன்றிடுஞ் சொரூபத் தென்றே, தோன்றிடும் பொருள்க ளெல்லாஞ் சொரூபமே யென்று கண்டான். 52

தோன்றிடும் பொருள்க ளுண்டாய்த் தோன்றியே யின்ப மாகித், தோன்றிடு மதனு ளந்தச் சொரூபமே யென்று கண்டு, தோன்றிடுஞ் சொரூபந் தன்னிற் றோன்றுமீ தசத்தே யென்று, தோன்றிடுஞ் சொரூபந் தானுய்த் துளக்கமற் றிருந்தான் வேந்தன். 53

கடிநகர் தோறுஞ் சென்றுங் காநகந் தோறுஞ் சென்றும், படிவல மாக வந்தும் பார்வைமா றுட்ட மின்றி, மடிவிலா மநத்த னுகி மாசிலா நிலைமை பெற்று, முடியுடை வேந்தர் வேந்தன் முத்தியே வடிவ மானுன். 54

முத்தியே வடிவ மான முடியுடை வேந்தர் வேந்த, னெத்திசை தனக்கும் ராஜ னெமைவிட வேறில் லென்று, சத்திய மாக வெண்ணித் தன்

னிட மதனிற் றன்னைச், சுத்திசெய் தனைத்து மாகிச் சுயஞ்சோதி யாகி நின்றான். 55

தன்னையே யன்றி யொன்றுந் தானுதி யாவி டத்தின், மின்னையே யொத்த வைய மித்தைகற் பிதம தென்றும், பொன்னையே யன்றி வேறு பூடண மிலது போல, வென்னையே யன்றி யொன்று மில்லெனத் தேர்ந்தான் வேந்தன். 56

உலகினை வேற தாக வுணர்ந்திடிற் பந்த மாகு, முலகினைத் தானே யாக வுணர்ந்திடின் முத்தி யாகும், இலகிடத் தோன்ற லெல்லா மென்னினை வேயென் றெண்ணி, இலகிடக் கண்டு வேறற் றிருந்தன னிளமை வேந்தன். 57

ஏகசக் கரம தாக விருந்தர சாள்வோன் செல் வப், போகமுந் திரண மாமப் போதநாட் டாசி யற்கை, யூகபுந் தியினு லாசா னுபதேசத் தாள வந்தச், சோகமற் றிடுநா டெய்தித் தொழிலெலா முடித்தான் மன்னன். 58

பந்தம்வீ டென்று மில்லைப் பரம்பொரு ளொன்றே யென்றுந், தந்தஞ்சங் கற்பத்தாலே சாலமோ கிப்பர் தீயோ, ரந்தமா திகளு மில்லா வரும்பொரு ளுமே யென்று, சந்தத நோக்கி யந்தத் தற்பரந் தானே யானுன். 59

குறைவிலா நிறைவ தாகிக் குளிர்ந்திளைப் பாறி வேந்த, னிறையள வேனுந் துன்ப மின்றி யே யின்ப மாகி, யுறைவிட மின்ன தென்ன வோரிட மின்றி யெங்கு, நிறைவதே யிடமாய் நின்று னிகரின்மா ராஜன் றுனே. 60

எங்குமாய் நிறைந்து நின்ற வேகராச் சியம தாள்வோன், தங்குத லின்றி யெங்குந் தானெனக் கண்ட தூயோ, னிங்குறைந் தகன்ற பாண்டத் தியல்பினெஞ் சருவம் பற்றி, யங்குரு வகற்றி நின்று ளுநந்தி யாகி வேந்தன். 61

சீவன்முத் தர்கள்பா னிற்குஞ் செப்பிய மநத்த ரூபம், மேவரும் பரம முத்தி மேவிடி னுச மாகுந், தாவரு நிலைமை நன்றுய்ச் சற்குரு வரு

ளாற் பெற்றுக், கேவல மாகி நின்ருன் கேடிலா
ஞாந வேந்தன். 62

இத்தகை ஞாநம் பெற்றே யெழின்முநி யாகி
யெங்குஞ், சித்தனுய்த் திரித நன்னைச் செப்பு
முன் னமைச்சர் தம்முள், வித்தக வொருவன்
கேட்டு வினவிட வேண்டு மென்றே, கத்தனு மா
சைத் தேடிக் கண்டடி பணிந்து நின்ருன். 63

பூவணை யாகி வாநம் பொருந்துமேற் கட்டி யாகித்
தீவம தாகி யிந்து செங்கதிர் வீசுங் காற்று
மேவுசா மரம தாகி விடுதலை மனைவி யாகிக் (தன்
கேவல மின்ப மாகிக் கிளர்ச்சியாய் நின்ருன் வேந்

ரதமுதற் சேனை சூழ ரத்நசிங் காத நத்தில்,
வித்வலங் காரத் தோடு வீற்றிருந் தமரும் வேந்த,
னுதவுகோ வணனுய் மேனி யுருத்தெரி யாத
நீருய், முதன்முடி விரித்து நின்ருன் முநிவனு
யொருவ னுகி. 65

கரிரத மிவர்த லின்றிக் கானடை யாகி யெங்
கு, முரியதோர் மனையு ணின்றி யூரெங்கு முண்

பா ஞகி, யரியரா சாங்கக் கோல மகற்றியே
தவாங்க மாகித், திரியுமவ் வரசை நோக்கிச் செப்
பின னமைச்சன் முனே. 66

அவனியி னினக்கு மேலோ ரரசனு மில்லை
யிந்தத், தவவடி வாகி யெங்குஞ் சரித்திட லெற்றி
னுக்கோ, நவமதா யுடலி தோடே நண்ணுவ
தெனையீ தன்றி, யிவணெனக் கருள வேண்டு
மெனக்கறி வோங்கு மாறே. 67

பதத்தினை வேண்டின் முன்னம் பற்றினின்
றில்ல றத்தைப், பதப்பட நிறுத்தி யேகல் பண்ப
தா மேலா முத்திப், பதத்தைவேண் டிடிலோ
ஞாநப் பார்வையிற் கூடு நீயெப், பதத்தினை
வேண்டி யிந்தப் பரதேசி யான தென்முன். 68

அமைவுடை யமைச்சின் மிக்கோ யடைவு
டன் வினவிக் கேட்டா, யிமையள வேனுஞ்
சித்த மிதுவது வெனவோ டாது, சமைவுடன்
கேணீ சொன்ன சங்கைக்குத் தரங்க ணன்முய்,

நமைவிட வேறோர் வேந்து நாட்டிலே யென்ப
தொக்கும். 69

பதமதை வேண்டி னில்லைப் பதப்படகிறுத்
தி யேக, விதமென்ற லொக்கு முத்தி யெய்து
தன் ஞானப் பார்வை, விதமதிற் றேன்று மென்
றாய் விருப்பமாய்க் குடும்ப பாரத், திதமதா யழுந்
து வோருக் கெங்ஙனம் பார்வை தோன்றும். 70

மநமிரு பொருளைப் பற்ற மாட்டாதட் டாவ
தாந, மினமிவை புறநோக் கான வேதினுற் கூடும்
வீடு, கனவுண்ணேக் காகு மில்லங் கருதிய புற
நோக் காகு, மநகவிவ் வூகந் தோன்ற வறைகுவ
நாமே கேளாய். 71

தென்றிசை நடப்போர் கங்கை சென்று
தோய்ந் திடுவ ரோதா, னன்றியு மவநி வாழ்க்
கைக் கமைச்சர்க ளுடனே காந்த, மொன்றியே
யூகஞ் செய்வா ருலகவேந் தாயி னோர்கள், நின்றி
தை நோக்கா யில்லி னிற்பவர் முத்தி சேரார். 72

பாசந்தான் பகைய தாகப் பார்வைபெற் றிடிற்பா சத்திற், பாசந்தான் வைத்துப் பின்னும் பற்றவுங் கூடு மோதான், பாசந்தான் பகைய தென்றே பகருநூன் மட்டே கற்றோர், பாசந் தான் விடவு மாட்டார் பரமெலா மெனவாய்ப் போக்கும். 73

அந்தமா தியுமி லாவீ டடைந்துடற் பிறப்ப றுக்கச், சுந்தர ஞானம் போதுந் துறவற மேதுக் கென்றே, மந்ததி காரி யோரை மதித்துநூ லுரை க்குஞ் செய்தி, யந்தம தான பேருக் கத்தகை விளம்பா தென்றும். 74

தோன்று கின்ற பொருளியல்புந் தோற்று விக்கும் பொருளியல்புந், தோன்ற வுனக்கி யாமு ரைக்கச் சோக மறவே கேட்டிடுவாய், தோன்று பொருள்க ளநித்தமுமாய்த் தூய்மை யின்றித் துக் கமுமாய்த், தோன்றுந் தோற்று விக்கும்பொருள் சுகமாய்ச் சுத்த நித்தமுமாம். 75

பால னனப ருவம்போம் பன்னுகு மாரப்ப ருவம்போங், கோல மானத ருணம்போங்

கோலை யூன்றிக்கு னிந்தெழுந்து, காலன் மாய்க் கவ னவர்களுங் கல்லென் றழுது பேர்மாற்றி, யேலப் பிணமென் றொருபெயரிட் டிடுகாட் டிடுதெ லொருதலையே. 76

கருவி னின்று மழிந்துபோங் கண்டகு ழந் தையி னுங்குமரப், பருவந் தனிலும் போந்தரு ணப் பருவந் தனிலுமழிந்துபோ, முருவ நடுங்கு மூப்பதினு மொடுங்கு மெந்தக் காலையினு, மொருவி யழித வியல்பாகு முலகத் துடலின் வாழ்க்கையுமே. 77

பஞ்ச பூதம ழிந்துபோம் பானுத் திங்களு டுக்கள்போம், வஞ்ச வசுரர் மடிந்திடுவர் மாகர் பதம்போம் வல்லரக்கர், துஞ்சு வார்கள் போகிய தந் துஞ்சும் பிரமன் பதந்தானுந், துஞ்சுந் திரு மால் பதந்துஞ்சுந் துஞ்சா தொன்றே பரமபதம்.

தோலி ரத்தமெ லும்பிறைச்சி சுக்கில மே தை மச்சையொன்றாய்த்; தூலிக ரித்தவு டம்பா குந் தொட்ட வெவையுந் தன்வடிவாய்க், கோலிய

டக்கிக்கொ ளும்தனைக் கூறு கூறா நோக்காது,
போலியு ணர்வோர் மகிழ்வெய்தும் புனித மென்
றும்ப ரமபதம். 79

அரந்தை யதனை யொழுங்காக வறையக்
கேணீ யவனியெல்லாம், பரந்த சிருட்டி திதியொ
டுக்கம் பண்பாய் நிகழுஞ் சிருட்டிதனில், பொருந்
து பெரிய துன்பைந்து போய்மாண் டுறில தெண்
மடங்கே, யிருந்த திதியு மிரண்டாகு மிளமை
யென்று மூப்பென்றும். 80

விருத்த பருவ மிகத்துன்பம் விளங்கு மிள
மை யிரண்டவையின், வருத்து பிணியின் மிகத்
துன்பம் வளமை யிளமை மூன்றாகுங், கருத்த
தறியாக் குழந்தையென்றுங் குமார மென்றுங்
காளை யென்று, மருத்த மறியா ததிற்றுன்ப
மடையும் பாலப் பருவத்தில். 81

தந்தை தாய ராசிரியர் தாங்கண் முனித
றனக்கஞ்சிச், சிந்தை கலங்குங் கௌமாரஞ் சிறந்த
காளைப் பருவத்தின், முந்து பசிநோய் காமநோய்

முடுகித் தணிக்கப் பொருடேட, விந்தப் புவநத்
திரவுபக விடைய ருத தொழிற்றுன்பம். 82

பொருளுண் டாகிற் காப்பதனுற் பொருந்துந்
துன்ப மாசாகி, ஞெருதம் மிகுத்த வாசரா லுத
வுந் துன்ப மொருகுடைக்கீழ், நிருப ஞகி ஞேய்
மரண நேரு மென்னும் பயத்தானும், வருவதெனே
யோ மறுமையினி லென்றும் வாடித் துன்புறுமே.

மாகர்க் கசுரர் பகையுளது மகிழ்ச்சி வாட்ட
மிகவுமுள, தாகத் தகலா நோயுமுள தநங்க
ணுளது நசையுளது, போகத் தழுந்தன் மிகவுளது
பொன்ற லுளது கற்பத்தே, சோகத் திறங்க
ளிவையுடைய துறக்கத் தென்னே சுகமுளதே.84

தேவர் மனிதர் துன்பத்தின் றிரங்களிவ்வா
ருகியிடி, லாவ கீழா மிருகமுத லசா மீரு மைவ
கையி, லோவ வில்லாத் துன்புக்கோ ருவமை
யில்லை நிரயத்தி, ஞேவ துன்பஞ் சொல்வதெனே
நோயே பவத்திற் சுகம்வீடே. 85

இந்த விழிவை யுடைய விந்த மாயைய சத்தே
யந்த வுயர்வை யுடைய வந்தப் பிரமஞ் சத்தே
தந்த மநதிற் றேர்ந்தோர் தள்ளி யெல்லை நிற்ப
ருந்தன் மனதி னன்று யூகித் தமைச்ச பாராய்.86

பொய்யென் றிதனை யறிந்தோர் பொருந்தி
நிற்ப துளதோ. மெய்யென் றதனை யறிந்தோர்
மேவா திருப்ப துளதோ, வைய முளதோ விதனி
லமைச்ச பாராய் நன்று, யுய்ய வறிவி லாதோ
ருழல்வர் நீக்க மாட்டார். 87

பொய்யை மெய்யென் றறிந்து போத மின்
மை யாலே, மெய்யைப் பொய்யென் றெண்ணி
மெலிந்தே யுழல்வ ருலகர், பொய்யைப் பொய்
யென் றறிந்து போத குருவி னருளின், மெய்யை
மெய்யென் றறிந்தே மெலிவு தீர்வ ருயர்ந்தோர்.

துன்பந் தோன்றி லெவருந் துறந்தே கராய்த்த
ணித்தே, யின்பந் தேட வியற்கை யின்ப மென்
றே தோன்றி, லன்ப தாக நீங்கா ரவர்கட் கெங்

நன் கூடு, நன்ப ரம ஞான நாட்ட மமைச்ச சொல்லாய். 89

இழிவை யுணர்ந்தா லுயர்வை யெவருந் தேடி நோக்கு, மிழிவை யுணரா ருயர்வை யெய்த நோக்கா ரென்று, மிழிவை யிழிவென் றுணர வெந்தக் காலம் வாய்க்கு, மிழிவை யுடையோர்க் கமைச்ச விதனை யூகித் துணராய். 90

பேத வாதி களைப்போற் பிரபஞ் சம்வே றெனவே, யீத கன்ற தலவே யெமையன் றி யதில் லென்றே, போத விழியிற் றுறந்த புனிதத் துறவே கண்டாய், சீத மதிபோற் குளிர்ந்து செநந வெப்பந் தீரும். 91

இருந்த விடத்தி லிருந்தே யெய்த லாமென் றுரைக்கிற், றிருந்து நிமல மநத்தோர் தீர ரெனினு மொழிந்தே, பொருந்தி யேகாந் தத்திற் போத மடக்க வேண்டும், வருந்து மநத்தோர்க் கென்னை வாய்க்கு மமைச்ச சொல்லாய். 92

முனமே யனைத்து முடித்து முழுது முணர்ந் தோ ரில்லின், இனமே சென்று நின்று மேக நீங்கா ரென்னில், திநமே யகமாய் நிற்போர் செக த்தி னியல்பை யுணரார், கனமாம் யாழ்ப்பாணத் தின் கப்ப லோட்டம் போல. 93

ஒருத்த னொரு ருளனை யொருவேந் தாக் கின் முன்னம், இருக்கு மிடத்தை நீக்கி யேக ராச தாநி, இருக்கு மன்றி முன்க ணிருக்கு மோ தான் சொல்லாய், திருக்கு ஞாந முடையோர் செகத்தை மெய்யென் றுழலார். 94

மனையினின் றூலும் பொருளுயிர்ச் சார வின் வருத்தநங் கெடுதலின் மகிழ்ச்சி, இனிமை யில் வாட்டம் விடயவின் பதனி லெட்டுணை யாயினு மாசை, பினையதிற் றமது பிரவிர்த்தி தானும் பேசுமிந் நான்குமில் லெனினும், தனை யுணர் வதற்குச் சாதகஞ் செயுங்காற் றள்ளியின் னிற்றலே தகுதி. 95

தீதுறு மனையின் பிணையிகழ்ந் தந்தச்செம் பொரு ளின்பமே வேண்டிச், சாதக மதனிற் றொடங்குகால் விடயந் தடையதாஞ் சாத்திய மான, போதினி லவையுந் தோன்றிடா தந்தப் பொருவிலா நந்தமே விடவே, ஆதலிற் றுறவின் ஞாநமஞ் ஞாந மாகுமென் றறைகுவர் பெரியோர்.

இல்லற மதனி லுறைந்துளோ ரிடத்தி விருப்பினு ஞாநங்கீ ழிரும்பில், புல்லிய மாரத் திநமென விளங்கும் போக்கியில் வினைத்துற வென்னும், நல்லற மடைந்தோ ரிடத்துறை ஞாந நற்றங்க மிசையிரத் திநம்போல், எல்லையி லொளி யாய் விளங்கிடு மாயி னில்சிறப் பன்றுஞா நிகட் கே. 97

முனமனை வர்களு முறைவது மில்ல முத்தி யை யுணர்ந்தறி ஞர்களும், பினமதி னின்ற படியி னுற் சங்கை பேசுவர் துறவுடை யோரை, இன மதை விடுத்தில் லறமது வெய்த விலையென வியம்புவ துண்டோ, மநமதி னிதனை யூகிநீ யமைச்ச மகிமையன் றில்லஞா நிகட்கே. 98

அரியது துறவற மல்ல தில்லையான்
மருவிய துறவற மொருவி மன்னனாய்
உருகெழு முடிகவித் துலக மாள்வது
பெருவிலை மணியினைப் பிண்டிக் கீதலே. 99

ஆடிய சகல மடங்குகே வலமு மகற்றியே யொளிப்படை கொண்டு, மூடிய விருளை முழுதையும் வீசி முடிவில்வீ டதனையே யுணர்ந்தோர், நீடிய ஞால மிசையினிற் பால னிசமருளுடையன்பேய் பிடித்தோன், கூடிய குணத்தி னூரிற்போய்க் குடியின் கூலியா ளினினியல் படைவார்

வினைகளோ ரிரண்டுஞ் சமமதாய் ஞாந மேவிடு காலையி னிந்த, மனையின்பங் கான்ற சோற்றிற்கண் டுவர்த்து மாற்றியே கைவிட வருமேல், தனையுள படியே யநுபவ மதனிற் றானுணர்ந்தாநந்த மடைந்தோர், பினையுமவ் விடயம் பூண்பர்க ளெனவே பேசுதல் வழங்குமோ சொல்லாய்.

விடயவின் பதனி னசையுளோர் தமக்கும் விரிவதாம் பேரின்பச் சுவையின், அடைவினைச்

செவியிற் கேட்டவக் கணமே யவற்றினை யகற் றிட வருமேல், இடைமுத லிறின் ஞாநவா நந்த மெய்தினோர் களும்பினு மிந்தக், கடைமனை வாழ் வை நினைவர்க ளென்றூற் கண்டனர் நகையரோ சொல்லாய். 102

பற்றிலே யாயி னவையினி விருப்பேன் பழை யவூழ் வினையெனி லாசை, சற்றெனு முதிப்பித் தல்லவோ வூட்டுஞ் சகவின்பி விறையெனு மிச் சை, முற்றுணர் ஞாநத் தோர்கள்பூண் பர்களோ முடிவிலா நந்தமே பருகி, நிற்றலே மீட்டும் விழிப் பினுங் கான னீரிற்கண் டுண்முக மடைவார். 103

பவமதை யினிமை யெனவெணி விடயம் பற்றிநின் றுழன்றவர் தாமே, பவமதை யினிமை யலவெணி விடயப் பற்றறுத் தருட்குரு வடை ந்து, பவமதை யறுக்கு நெறியுணர்ந் தருளிற் பர வின்ப மடைந்தவர் தாமும், பவமதை யினிமை யெனவெணி னலவோ பற்றுவர் விடயவின் புரை யாய். 104

கொடிமுதல் வாடும் வேர்முழு தினையுங் கோதறக் களைந்திடிற் களைந்தும், படிமிசை கொடிபூ காய்பழ மோங்கல் பகரதி சயமஃ தினைப் போல், அடிநடு வீறிற் பிரமந்தா னாகி யகப்பற்றை யறுத்தவ ரிடத்தும், மடிவுறு மனையில் விரும்பியே நெஞ்சம் வருத்தந மாதலென் றறைவார். 105

ஆணவ மதனைத் தோய்ந்துட வினைநா னுமெனத் தினவெரி வவையைப், பேணலைச் சுகமென் றுண்மகிழ்ந் திடுவோன் பேரின்பத் தாசைய தாகிப், பூணவஞ் ஞாந மிலையதின் ஞாநம் பொருந்தியச் சொருபந்தா னாகி, ஏணவா நந்தத் தழுந்துவோன் விடய மெய்திடின் ஞாநமே யிலையால்.

கநவதனி லுணர்விலது காணுந்த நுவாதிகளைக் கருதி யேநின், றுனுமவரி னிதுகநவென் றுணர்ந்தவர்க ணசையிலதி னுலகு தன்னில், தனதுசுய வுருவதனை யநுபவத்திற் றுனுணர்ந்திச் சகமதெல்லாம், மநமதனிற் சாலமென வுணர்ந்தவரிவ் வுலகின்பின் மைய னீங்கும். 107

கதிரவன்முன் னிருளிருக்கு நயநமுடை யொருவன்குழிக் கண்ணே வீழும், அதிகவலிச் சூரனமர்க் களக்குவெரு வுவன்கிருத நறையக் காரம், இதமுளபா யசமுநிரம் பருந்தினன்கூழ் தனிற்செய்வ னிச்சை யென்றால், விதமிவைநான் கினுக்குங்குறை யதின்ஞாநிக் கிழுக்காகும் விட யஞ் சென்றால். 108

இங்குறைந்த பாண்டமதின் வாதனையில் வாதனைக ளிருக்கு மென்றல், துங்கவறி வுடை யோர்கட் கின்றியமை யாததொழி றொடங்கி நிற்றல் அக்கியைத்தம் பரம்வல்லார்க் கனல்சுடா ததின்வினைக ளடுக்கா தென்றல், தங்கும்வினைக் கேதுவாம் விடயமதில் விருப்பாதி சாரா தென் றல். 109

உணர்வுடையஃ ஞாநியெவை புரிந்திடினு மிழிவிலிழி வுரைத்த தாகின், இணையிலிரு தீய னென்பர் யூகமில வதனுன்மற் றெவைகள் செய் தும், அணைவதிறாழ் வெனுமவனே தீயன்மிக

ஞாநமதற் காகுந் தாழ்வா, னணுகினன்றே ஞாந
மொரு வனைஞாநி யெனப்பெயரு நண்ணி நிற்றல்.

கருவயிற்றை யுடையதுவுங் கநவயிற்றை
யுடையதுவுங் கருதிப் பெண்ணின், உருவதனைக்
குறிப்பதினேக் கிடிற்றேன்று முளபடியே யுலகு
தன்னில், குருவையடைந் தவனருளிற் சொரூ
பத்தை யநுபவமாக் குறித்து ளோரும், இருவை
யத் திடம்பமாய்த் தமைஞாநி யென்போரு மே
திற் றேன்றும். 111

அருச்சுநற்கு மிராமருக்கு மதிகார மவை
பார்த்தே யறைந்த நூலின், கருத்தறியாய் ஞாந
மொன்றே பிரமாணஞ் சரிதையது கணக்கன்
றாகும், விருத்தமறி வாசார முடையோனே ஞாநி
யில்லோன் விருத்த னாகும், திருத்தமுட னமைச்
சவிது துணிவென்றே யுட்கொள்வாய் தீர னுகி.

என்றங் கநேக மாவிரித்தே யிராச யோகி
யுரைசெய்து, நின்று வாக்குத் தனையடக்கி நிம்
டத் தகற்றி மநத்தினையும், ஒன்று மில்லா

வெறும்பாழா யொன்றுஞ் சமாதி தனையடைந் தான், நின்றங் கமைச்ச னிதுகண்டிந் நேர்மை புதிதென் றதிசயித்தான். 113

இந்த வுணர்வு நமக்கின்ன மெய்த வில்லை நாமிங்கே, எந்த வுணர்வு கொடுநிற்பே மென்ன வமைச்சன் யூகித்து, வந்த வழியே தான்றிரும்பி வளப்ப முடைய மாபுரிக்கே, பந்த முடையோ ருடனிருந்து பகர்ந்தா னரச னியற்கையெல்லாம்.

கேட்ட பேர்கண் மிகவியந்து கிட்டா தென்று மிம்முனிபோல், தேட்ட முடனே யவரவர்க டேடி வந்து பணிந்திடவும், வாட்ட முடனே தாய்தந்தை மனையாள் பதத்தில் வீழ்ந்திடவும், நாட்ட மாறு பாடின்றி நகைசெய் திருந்தா னற்றவனே. 115

வந்த பேர்க ளுடன்வார்த்தை மலரா திருப்ப தவாறிந்து, பந்த முடையே நமக்கென்னை பகர்ந் தாற்றேன்று மெனத்திரும்பித், தந்த மிடத்திற் சென்றார்க டவனுஞ் சிறிது நாட்கழித்துத்,

தொந்த மொன்று மில்லாத சுயமா முத்தி தானு
னன். 116

இந்தமா ராஜன் சென்ற விதிகாசந் தனைப்ப
டிப்போர், சிந்தனை யொன்று மின்றித் தீரவே
துறவ ராகி, அந்தமு மாதி யில்லா வமலமே வடிவ
மாவர், எந்தமை யருளி னண்ட வெழிற்குரு
பரையே வாழி. 117

மஹா ராஜத் துறவு—முற்றுப் பெற்றது.

பாயிர முள்படச் செய்யுள் 126.

சர்வஞ் சின்மயம்

மஹா ராஜத் துறவு செய்யுள் 128

முதற் குறிப்பு அகராதி.

அந்நெறி குருவால் 15
அந்தமா தியுமிலா 23
அமரர்கள் பரவும் 3
அமைவுடை 27
அரசர்க ளமைச்சர் 15
அரசர்தம் 8
அரசர் வந்திடு 7
அரந்தை யதனை 31
அரச னந்த 21
அரியது துறவறம் 37
அரிவையர்கள் 19
அருச்சுநற்கும் 41
அருந்ததி கணவன் 12
அருளுருவா யுயிர் 4
அலதுநீ யேகின் 16
அவரவர் வினையின் 17
அவனியி னின் 27
அறிவை நோக்கிடில் 19
ஆகமத்தின் 20
ஆடிய சகலம் 37
ஆணவ மதனை 39
ஆண்டதோர் 16
ஆதியி னினது 16
ஆலயஞ் சாலை 9
இங்குறைந்த 40
இத்தகை ஞானம் 26
இந்தமா ராஜன் 43
இந்த விழிவை 33
இந்த வுணர்வு 42
இந்திர ஞலயம் 8

இருட்கலி வலியின்	4	கடிநகர் தோறும்	23
இருந்த விடத்தில்	34	கதலியுங் கமுகு	11
இருவகைச் சார்வாம்	15	கதிரவன் முன்	40
இருவரி லரசன்	13	கநவதனில்	39
இலங்கிய வால்	11	கரிரத மிவர்த லின்றி	26
இல்லற மதனி	36	கருவயிற்றை	41
இவ்வர சியற்கை	17	கருவி னின்றும்	30
இழிவை யுணர்ந்தால்	34	கவரியோ டாலவட்	8
உணர்வுடைய ஞாநி	40	குழைத்ததண்	7
உலகினை	24	குறைவிலா	25
உறவாகு மென	18	கேட்ட பேர்கண் மிக	42
எங்குமாய்	25	கொடிநெ ருங்கும்	10
என்றுநல் வேந்தன்	18	கொடிமுதல் வாடும்	39
என்றுமற் றநேக	17	சகரர் தம்வலி	6
என்றங் கநேக	41	சிவன்றிரு வுருவாம்	2
ஏகசக் கரம தாக	24	சீவர்க ளிடத்தில்	14
ஒருத்தனே ரூருளனை	35	சீவன் முக்தர்கள்	25
கங்கையே முதலாம்	9	செக்கர் பொன்றே	5
கடிகமழ்	5	சோகமே யின்றி	12

ஞானமா னதுபொது	20	தோன்று கின்ற	29
தந்தை தாய ரா	51	நகர்தனி லேகிப்	22
தந்தைதா யிருவருந்	19	நின்னுடைய	20
தருக்கினர் நைமி	6	பஞ்ச பூதம ழிந்	30
தருநிழ லரசு வை	7	பதத்தினை வேண்டி	27
தவம்பல புரிந்து	9	பதமதை வேண்டினி	28
தனியிட மதனி லி	13	பந்தம்வீடென்று	25
தன்னையே யன்றி	24	பவமதை யினிமை	38
திங்களார் சடையிற்	4	பற்றிலை யாயி	38
திங்கௌொண் கவி	2	பாசந்தான் பகைய	29
தீதுறு மனையின்	36	பால ஞன பருவம்	29
துன்பந் தோன்றி	33	பூவணை யாகி	26
தூம்புடைப் பிறை	8	பேத வாதி களைப்	34
தென்றிசை நடப்	28	பெய்யென் றிதனை	33
தேவர் மனிதர்	32	பொய்யை மெய்யெ	33
தொய்யின் முலைக்	3	பொருந்திவா ழிட	22
தோலி ரத்தமெ	30	பொருளுண் டாயிற்	32
தோன்றிடும் பொ	23	மஞ்சம ரிஞ்சூழ்	7
தோன்றிடு முலக	22	மடங்க லன்ன	10

மாநமிரு பொருளைப்	28	வந்தபேர் களுடன்	42
மனைதனி லாசை	14	விடயவின் பதனி	37
மனையினின் ருலும்	35	விரிவாய ஞாநம	21
மனைவியுந் தானு	13	விருத்த பருவ	31
மாகர்க் கசுரர்	32	வில்வி ளங்கிய	11
முத்தியே வடிவ	23	வினைகளோ ரிரண்	37
முனமனை வர்களு	38	வினையுள வளவுங்	18
முனமே யனைத்து	35	வேத நீதியிற் கூறி	10
மூவுல கதனிலு	11	வேதவா கமசாத்	14
ரதமுதற் சேனை	26	வேந்தனே யுனை	21
வண்டுழா யலங்	5		
வடிகொள்வெண்	10	ஆகச் செய்யுள்	128

மஹாராஜத் துறவு. முதல் நினைப்பு

கவி 128

பன்னிருசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

திருஅமரர் கள்தொய்யின் இருள்திங்க ளாட்
அருள் செக்கர்கடி வண்டுசகரர் - திங்களொண்
சிவன்தருக் குழைபஞ்ச தருநிழல் அரசர்வந் திடு
அரசர்தம், தருகவரி இந்திரன் தூம்புடைக் கங்
கையே ஆலதவ வேதநீதி - கொடிமடங் கவடிகத
வில்மூவு இலங்கிய அருந்ததிக சோகமேயின்,
அருமனைவி தனிஇருவர் மனைதனில் வேதவா
சீவர்இரு வகைஅங்நெறி - அரசர்கள் ஆண்டாதி
அலதுநீ இவ்வரசி என்றுமற் றவர்வினையுள, அரு
என்று நல்உற தந்தை அறி வைநோக்கி அரிவை
நின் ஞானமான - ஆகவிரி வேந்தரரசன் நகர்
பொருந் தோன்றிடு தோன்றிகடி முத்தி புதிதே.

புதீதன்னை உலகினை ஏகசக் கரபந்த குறை
எங்கு சீவன்இத்த—பூவணை ரதகரிர அவபதத்
தினைஅமைவு பதமதைம நம்தென்றிசை, ததீ
பாச அந்ததோ பாலகரு பஞ்சபூ தோல்அரந் தை
விருத்த—தந்தைபொரு ளுண்டாகி மாகர்தே
வர்இந்த பொய்யென்றி பொய்யை துன்பம், அதீ
இழிவை பேதஇருந் தவிமுனம் ஒருமனையின்
தீதுஇல்ல முனமனைவ—அரிஆடி வினைகளோர்
விடபற்றி பவகொடி ஆணவம கநவகதிர, இதீ
இங்கு உணர்கரு அருச்சுநற்கு என்றங்க இந்த
உணர் கேட்டவந்த - இந்தஅரி மாராஜ துறவுநா
லின்பெருமை யாவர்க்கு மெளிதாதுமே.

மஹா ராஜத் துறவு முதல் நினைப்பு முற்றிற்று.

NELSON & CO., CHOOLAI MADRAS